**முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை**
**முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,**
**முதன்மை சார்பு நீதிபதி.**
**MCOP. No. 246/2019**

ம.சா.3 தேதி. 06.11.2025

| | | | |
|---|---|---|---|
| பெயர் | Dr. ராஜசேகரன் | த/பெ, | M.ராமானுஜம் |
| வயது | 63 | தொழில் | |
| கிராமம் | நாங்கூர் | தாலுக்கா | சீர்காழி |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் தற்போது மயிலாடுதுறை பட்டமங்கலத்தெருவில் வைரம் மருத்துவமனையில் எலும்பு முறிவு மருத்துவராக இருந்து வருகிறேன், நான் 09.01.2019 அன்று அக்பர்ஜின்னா வயது 63 என்பவரை அவருக்கு விபத்தில் ஏற்பட்ட இடது முழங்காலுக்கு கீழ் கனுக்காலுக்கு கீழே நீண்ட கிழிந்த காயம் ஏற்பட்டதற்காக என்னிடம் சிகிச்சைக்கு வந்தார். நான் அவருக்கு சிகிச்சை மேற்கொண்டேன். அவருக்கு இரத்தப்போக்கு அதிகமாக இருந்ததால் அவருக்கு 2 யூனிட் இரத்தம் ஏற்றி புண்ணை சுத்தம் செய்து தையல் போட்டு அறுவை சிகிச்சை செய்தேன். அவரை 15.01.2019 அன்று டிஸ்சார்ஜ் செய்தேன். அவருக்கு சிகிச்சை முழுமை அடையவில்லை. அதனால் அவரை புற நோயாளியாக சிகிச்சைக்கு (டிரஸ்சிங் மற்றும் தையல் பிரிப்பதற்காக) வரச்சொன்னேன்,. அவர் தொடர் சிகிச்சைக்கு என்னிடம் வந்தாரா அல்லது வரவில்லையா என்று எனக்கு உறுதியாக தெரியாது. ஏனென்றால் புறநோயாளி சிகிச்சை பதிவேடு நோயாளிகள் கையிலேயே நாங்கள் கொடுத்துவிடுவோம். அந்த சமயம் கொரானோ ஆரம்ப கட்டத்தில் அரசு மருத்துவமயில் அவசர சிகிச்சை மட்டும் நடைபெற்றது. ஊரடங்கு காலத்தில் அவருக்கு ஏற்பட்ட காயத்தினால் ஏற்பட்ட புண் ஆறாமல் செப்டிக் ஆகி Septicemia ஏற்பட்ட இறப்பதற்கு வாய்ப்பு உண்டு என்றால் சரிதான்.

எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.